*கவனிக்க.- 2024.03.15 ஆந் திகதிய 2376 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2377 - 2024 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2024.03.22

*2377 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | *444* |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |

| | பக்கம் |
|---|---|
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## பாத்ததும்பர பிரதேச சபை

*மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தினை நடத்திச் செல்வதற்கென 2024 ஆம் ஆண்டில் ஊன் வினைஞர் அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது தொடர்பில் ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது உப பிரவின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்*

*கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்தில் பாத்ததும்பர பிரதேச சபையின் நிருவாகப் பிரதேசத்திற்குள் மாட்டிறைச்சி விற்பனை நிலையத்தினை நடத்திச் செல்வதற்கென ஊன் வினைஞர் அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளார் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*இந்த அனுமதிப்பத்திரத்தினை வழங்குவது தொடர்பில் பாத்ததும்பர பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குள் வசிக்கும் எவரேனும் எதிர்ப்பதற்கு உரிய காரணங்களை எழுத்துமூலம் குறிப்பிட்டு. இவ் அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 14 (பதினான்கு) நாட்களுக்குள் இரண்டு பிரதிகளில் என்னிடம் முன்வைக்குமாறு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கப் பிரதேச சபை சட்டத்தின் 9(3) ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 7(2) ஆவது உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2024, பெப்புருவரி மாதம் 6 ஆம் திகதி 179 கொண்ட தீர்மானத்தின் கீழ் இத்தால் அறிவிக்கின்றேன்.*

எச்.ஐ.எம். குலதுங்க,
செயலாளர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

*பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2024, மாச்சு 05.*

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *வர்த்தகம் செய்யுமிடம்* | *வர்த்தகத்தின் தன்மை* |
|---|---|---|
| ஐ.ஏ. ரவுப் | 15/8,B1 தொரகமுவ வீதி, வத்தேகெதர | மாட்டிறைச்சிக் கடை |

*03 - 342*

---

## ரம்புக்கனை பிரதேச சபை

*1975 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல், நினைவுச் சின்னங்களை நிர்மாணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் சட்டம் 'கே.பீ. மலித் திமன்த மாவத்தை' எனும் பெயரைப் பெயரிடுதல்*

*ரம்புக்கனைப் பிரதேச சபை நியாயாதிக்க எல்லைக்கு உரித்தான வஹவ கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள நவ பண்டார வத்தையின் பிரதான வீதியின் துணைவீதியைகே.பீ.மலித்திமன்தமாவத்தைஎனும்பெயரைப்பெயரிடுவதற்காகரம்புக்கனைபிரதேச சபையின்செயலாளர்மற்றும்தத்துவங்கள்பணிகளைநிறைவேற்றும்அலுவலரானஎன்னால்2023.10.29ஆம்திகதிதீர்மானமொன்று எடுக்கப்பட்டிருப்பதனால் தேசிய அரச சபையின் 1975 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வீதிகளுக்குப் பெயரிடுதல் நினைவுச் சின்னங்களை நிர்மாணித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் சட்டத்தின் 57 ஆ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2023.09.17 ஆம் திகதிய சப்பிரகமுவ மாகாண கௌரவ ஆளுனர் வழக்கறிஞர் நவீன் திஸானாயக்க அவர்களால் மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வீதியை*

'கே. பீ. மலித் திமன்த மாவத்தை' எனப் பெயரிடுவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதனாலும் கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வீதியை கே.பீ. மலித் திமன்த மாவத்தை எனும் பெயரில் பிரகடணப்படுத்துவதாக இத்தால் அறிவித்தல் செய்யப்படுகின்றது.

ஆர்.எம்.பீ. ரத்னாயக்க.
செயலாளர்,
தத்துவங்கள், பணிகளை நிறைவேற்றும்
உத்தியோகத்தர்,
ரம்புக்கனை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2023, ஒற்றோபர் 25.

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| 01. | உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | : | ரம்புக்கனை பிரதேச சபை |
| 02. | மாவட்டம் | : | கேகாலை |
| 03. | கிராம அலுவலர் பிரிவு | : | வஹவ |
| 04. | வீதியின் விபரம் | : | வஹவ வல்கம வீதியில் நவ பண்டாரவத்த வீதியின் பிரதான துணை வீதி ஆரம்பிக்கும் இடத்தில் இருந்து பிரதேச சபைக்கு உரித்தான பொதுக் காணித்துண்டின் இறுதி வரை |
| 05. | தற்போது பாவனையில் உள்ள பெயர் | : | நவ பண்டார வத்தை பிரதான வீதியின் துணை வீதி |
| 06. | புதிதாக இடப்பட்ட பெயர் | : | கே. ஆர் மலித் திமன்த மாவத்தை |

03 - 343

---

## நானாவித அறிவித்தல்கள்

**கடுவளை மாநகர சபை**

நானாவிதக் கட்டணங்களை விதித்தல் - 2024

2363 ஆம் இலக்க 2023, திசெம்பர் 15 ஆந் திகதிய (VI ஆ) எனும் பகுதி, உள்ளூராட்சி வர்த்தமானப் பத்திரிகையின் நானாவிதக் கட்டணங்கள் எனும் தலைப்பில், 46 ஆம் பக்கத்தின் கீழ் உப இல. XX மற்றும் XXI இல் (அ) முதல் (ஊ) வரையும், மேலும் 52 ஆம் பக்கத்தின் கீழ் உப இலக்கம் : XLI முதல் XLVI வரை குறிப்பிட்டுள்ள கட்டணங்களில் அரச அங்கீகாரம்பெற்ற வரிப்பணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன என 59 ஆம் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள குறித்த அறிவித்தல் கீழுள்ளவாறு திருத்தப்பட வேண்டுமென பொது மக்களின் தகவலுக்காக இவ்வாறு அறிவிக்கப்படுகின்றது.

தில்ருக்ஷி கமகே,
நகரசபை ஆணையாளர் மற்றும்
அதிகாரங்கள், கடமைகள்
மற்றும் பணிகளை
செயல்முறைப்படுத்தும்
உத்தியோகத்தர்.

மாநகர சபை அலுவலகம்,
கடுவளை,
2024, மாச்சு 22.

**கடுவளை மாநகர சபை**

*நானாவிதக் கட்டணங்களை விதித்தல் - 2024*

*கடுவளை மாநகர சபையின் 2023 திசெம்பர் மாதம் இருபத்தியோராம் (21) திகதி மற்றும் 2021 பெப்புருவரி மாதம் எட்டாம் (08) திகதி இடம்பெற்ற நிர்வாகச் சபைக் கூட்டத்தில் விடய இலக்கம் 2023/01/ப /தீர்மானம் இலக்கம் 583 இன் கீழ் மற்றும் 2024/01/ப/ தீர்மானம் இலக்கம் 37 இன் கீழ், கீழே குறிப்பிடப்படுகின்ற முன்மொழிவுகள் தீர்மானிக்கப்பட்டதாக பொது மக்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*தில்ருக்ஷி கமகே,*
*நகரசபை ஆணையாளர் மற்றும்*
*அதிகாரங்கள், கடமைகள்*
*மற்றும் பணிகளை*
*செயல்முறைப்படுத்தும்*
*உத்தியோகத்தர்.*

*மாநகர சபை அலுவலகம்,*
*கடுவளை,*
*2024, மாச்சு 22.*

**நானாவிதக் கட்டணங்களை விதித்தல் - 2024**

உப இலக்கம் : XX மற்றும் XXI இல் (அ) முதல் (ஊ) வரையும் மற்றும் உப இலக்கங்கள் XLI,XLII, XLIII, XLIV,XLV மற்றும் XLVI இல் குறிப்பிட்டுள்ள கட்டணங்களுக்கு மேலதிக அரச வரிப் பணம் அறவிடப்படுகின்றது.

*03 - 367*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.